உ

அம்பாள் துணை



சுதுமலை வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும்
வாழ்விடமாகவும் கொண்ட

# அமரர் காசிநாதர் வேலுப்பிள்ளை இராசையா

(K. V. R. பிரபல சுருட்டு, கோடா வர்த்தகர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**29-04-2000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# காசிநாதர் வேலுப்பிள்ளை இராசையா



தோற்றம்
**13–2–1916**

மறைவு
**30–3–2000**

### திதி வெண்பா

ஆண்டு பிரமாதி யானபங் குனிபதினேழில்
தூண்டு தசமித் திதிதுலங்க — ஈண்டுமிக
நல்லவனாம் இராசையா நாநிலத்தை விட்டிவர்ந்து
தில்லைச் சிவன்தாழுற் றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சுதுமலை வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும்
வாழ்விடமாகவும் கொண்ட

அமரர்

# காசிநாதர் வேலுப்பிள்ளை இராசையா

(K.V.R. பிரபல சுருட்டு, கோடா வர்த்தகர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு

## இந்நூல் சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய் அன்பு நிறைந்த
பேரொளியாய் இன்சொல் பேசி
அன்புடன் எம்மைப் பேணிக்காத்து,
அனைவருடனும்
பாசத்துடனும் நேசத்துடனும், இறக்கும் வரை
இன்முகத்தினனாய்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும்
தெய்வமாகிவிட்ட எமது
அன்புத் தந்தையின்
திருப்பாதங்களுக்கு இம்மலரினைக்
காணிக்கையாக்குகிறோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர்

# திரு காசிநாதர் வேலுப்பிள்ளை இராசையா

( K.V.R. பிரபல சுருட்டு, கோடா வர்த்தகர்)

அவர்களின்

# வாழ்வியல் தடங்கள்...

சைவமும் தமிழும் சிறப்புற்றிலங்கும் சீரான நற்பதியாம் சுதுமலையின் வடபால் உயர்சைவ வேளாண் பெருங்குடியில் திகழ்ந்த வேலுப்பிள்ளை - சீதைப்பிள்ளை தம்பதியினரின் இல்வாழ்வின் இனிய காலத்தில் தாம் பெற்ற பெரும் பேற்றினால் அவதரித்தோர் நால்வர். அவர்கள் காசிப்பிள்ளை, செல்லத்துரை, நாகம்மா, இராசையா எனப் பெயர் பெற்றிருந்தனர்.

இவர்களுள் இளையோனாய் பிறந்த இராசையா அன்பும், அறமும், அறிவும், அடக்கமும், அழகும் நிறைந்தவராய் சிறுவயதில் இருந்தே இறைபக்தியுள்ளவராய் வாழ்ந்தார். இளமைக் கல்வியினை சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் செவ்வனே கற்றார். தான் பெற்ற கல்வியினாலும் பெற்றோரின் இதமான வளர்ப்பினாலும் தன் குலத்திற்கும், சமூகத்திற்கும் நல் மனிதனாய் திகழ்ந்தார். "தனக்கென வாழா பிறர்க்குரியாளன்" ஆனார்.

தன் வாழ்வின் ஒவ்வொரு அடிவைப்பிலும் நிதானமாகவே முன்நோக்கி நகர்வார். எதிலும் சலிக்காத மனமும் சினங் கொள்ளா உளமும் சீறிவிளாப் பேச்சும் எல்லோரையும் இவர்பால் ஈர்க்கவே செய்தது. காலத்தை நன்கு கணக்கிட்டு அதற்கு இயைபாக தன்னை வழிநடத்திக் கொண்டிருக்குமக்காலத்தில் இளமையும் வஸீகரமும், உழைக்கும் ஆர்வமும் நிறைந்த காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையும் வசீகரமும், உழைக்கும் ஆர்வமும் நிறைந்த காலம். வயது இருபத்தினான்கு இருக்கும். அவ்வேளை செந்தமிழும் சைவமும் சிறப்புற ஓங்கும் உரும்பிராயில் உயர் குடியில் பிறந்த காசிப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியினரின் தவப்பேற்றால் பெற்ற பிள்ளைகள் அறுவர். அவர்களிலே நல்லம்மா எனும் அருங்குணநாயகியை இல்வாழ்க்கைத் துணைவியாய் இனிதே கைப்பிடித்தார்.

இருவரும் இல்வாழ்வில் இனிதே இனித்திருக்குமக்காலம் அயராது தன் தொழிலின் பெரு முயற்சியினால் பெரும் செல்வரானார். இல்வாழ்வானாய் நின்று இயல்புடைய மூவர்க்கும் நல்ல துணையாகி நின்ற இவரது இல்வாழ்வு சிறந்தது. தொழில் மேம்பாடு பெற்று சிறப்படைய K.V.R. எனும் நாடறிந்த பெரும் வர்த்தகர் ஆனார். காலமும் சூழலும் அவரை வழிநடத்தியது. இவ்வேளை, 'இல்வாழ்வின் பெரும்பேறு புதல்வரைப் பெறுதலே' எனும் கருத்தறிந்து - இறையருளால் தன் இல்லாளுடன் சேர்ந்து கூடிப்பெற்ற பெரும் செல்வங்கள் எண்மர். அவர்கள் பவளராணி, குணநாயகி, சிவநாதன், ஜெகநாதன், சரஸ்வதிதேவி, சிவசோதிநாதன், ஸ்ரீரங்கநாதன், இரகுநாதன் எனத் திருநாமம் கொண்டோர்.

தாம் பெற்ற பெரும் செல்வங்களை நல்விருட்சங்களென வளர்த்து, நிழல் பரப்பி நின்று சிறப்புற செய்யவேண்டியது பெற்றோர் கடனே. இதை தன் வாழ்வின் முழுமுதற் சிந்தனையாய் மனதில் நிலைநிறுத்தி, தன் குஞ்சுகள் ஒவ்வொன்றையும் செவ்வனே பாதுகாத்து உயரவைத்த பெரும் தந்தை இவர்.

பிள்ளைகளுள் மூத்தவராம் பவளராணியை ஏற்ற நல் கணவனான உடுவில் மெக்கானிக் சண்முகநாதனுக்கும் (அண்ணா), குணநாயகியை - கொக்குவிலைச் சேர்ந்த பொறியியலாளர் அருளானந்தனுக்கும், கனிஸ்ட புத்திரி சரஸ்வதிதேவியை - திருமலையைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் இரவீந்திரனுக்கும், சிரேஸ்ட புத்திரன் சிவநாதனை தன் தொழிலுக்குரிய வாரிசாக்கி அவரை இணுவிலைச் சேர்ந்த பராசக்திக்கும், ஜெகநாதனை - மேற்கு ஜேர்மன் அனுப்பி அங்கு அவர் சிறப்புற இருக்க நல்லூரை சேர்ந்த ஜெயக்குமாரிக்கும், சிவசோதிநாதனை - பிரான்ஸுக்கு அனுப்பி - அங்கு தொழில் பெற்று அவரை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவுக்கு அனுப்பி - அங்கு அவர் சீரோடு இருக்க அவரை உரும்பிராயைச் சேர்ந்த குமுதினிக்கும், கடைசிப் புத்திரனான இரகுநாதனை கனடாவுக்கு அனுப்பி அங்கு சிறப்போடு இருந்துவரும் வேளை அவருக்கு ஏழாலையைச் சேர்ந்த வத்சலாவுக்கும் திருமணம் செய்து வைத்தார். தன்பிள்ளைகளும், மருமக்களும் சீரோடும் சிறப்போடும் இல்வாழ்க்கை நடாத்தி வருதலைக் கண்ணுற்று பெருமகிழ்வுற்றிருந்தார்.

பிருந்தா, பிருதிவிராஜ், நர்மதா, அருட்சங்கர், அபர்ணா, அர்ச்சனா, அபர்னாத், லக்ஷி, லெளஷி, திருக்குமார், ராஜ்குமார், பிரசன்னா, பிரதாப், பிரசாத், தனுஜா, லவன், மருகன், ஜஸ்வரன், அபிரா ஆகிய பேரப்பிள்ளைகளைக் கண்டு அவர்களோடு கொஞ்சிக் குலாவி மகிழ்ந்திருந்தார்.

பேரப்பிள்ளைகளான - பிருந்தா - உடுவிலைச் சேர்ந்த தவராஜ் என்பவரை கனடாவில் மணம் முடித்து கோபிநாத், மங்களநாத், சங்கர்நாத் ஆகிய பூட்டப்பிள்ளைகளைப் பெற்றும், நர்மதா - திருநெல்வேலியைச் சேர்ந்த தேவகுமாரை கனடாவில் மணம் முடித்தும், லக்ஷி - கோண்டாவிலைச் சேர்ந்த சிவாஜனை சுவிஸ்லாந்தில் மணம் செய்து மதூஷி, கேதுஜன் ஆகிய பூட்டப்பிள்ளைகளைப் பெற்றும், லெளஷி - உடுப்பிட்டியைச் சேர்ந்த சசிதரனை சுவிஸ்லாந்தில் மணம் செய்து ஆகாஷ், ஆஷா ஆகிய பூட்டப்பிள்ளைகளையும் பெற்றுக் கொடுக்க அன்னார் பெரும் மகிழ்வில் திளைத்திருந்தார். தன் வாழ்வில் பூட்டப்பிள்ளைகளைக் கண்ட பெரும் திருப்தி. வாழ்க்கையை முழுவதுமாய் வாழ்ந்துவிட்ட பூரணத்துவம். இருப்பினும், தன் பூட்டப்பிள்ளைகளின் மழலை மொழி தன் செவியில் இனிக்காதா எனும் பேரவா அவர் நெஞ்சுள் நிறைந்தே இருந்தது இறுதிவரை...

திருமணம் செய்து மனைவியோடு கூடி இல்வாழ்வு சீரோடும் சிறப்போடும் நாற்பத்தியெட்டு ஆண்டுகள் கரைந்துபோக தனது எழுபத்தியிரண்டாவது வயதில் தன் பிரியத்திற்குரிய வாழ்க்கைத் துணைவியை இழக்க நேர்ந்தது. மனைவியை இழந்த துயரோடு தன் வாழ்வின் முடிவினை எட்டும்வரை பன்னிரண்டு வருடம் தன் பிள்ளைகளுடனேயே கூடி இருந்தார். அயல், உறவு, நட்பு, என்ற பல தளங்களிலும் இணைந்து வாழ்ந்து வரும் காலத்தில் அன்னார் தனது எண்பத்தி நான்காவது வயதில் (30-03-2000) தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வியலின் ஆயுட்காலம் நிறைவுற இறைவன் திருவடி சேர்ந்தார்.

தன் வாழ்க்கைப் பயணத்தின் இறுதிக் காலம் வரை யாருக்கும் அடிபணிந்து போகாது அஞ்சாத மனமும், அயராத உழைப்பும், பிறரில் நேசிப்பும், சமூகத்தில் பற்றுணர்வும் கொண்டு நிலையான, குலையாத நெஞ்சினராய் வாழ்ந்தார். அவர் வாழ்ந்து வந்த வழித்தடங்கள் ஒவ்வொன்றும் - பிறரை வழிநடத்திச் செல்பவை - அழியாதவை. என்றும் நிலைபெற்று வாழ்பவை.

"பிறப்புண்டேல் இறப்புண்டு" என்பதற்காய் வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்தவர். வாழ்ந்து காட்டியவர். அவரின் நினைவுகள் என்றைக்கும் அழியாத ஒரு ஓவியம் ஆகவே நெஞ்சில் நிலைத்திருக்கும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

திருப்பரங்குன்றுறை தீரன்

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன்அடி நெஞ்சே குறி

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்- கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

## நூல்

### நிலை மண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நண்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறிஇரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
ஐவிரலடியினை அருள்வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுது மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா சஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை வருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரஹண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகமொழி பவனே!
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப்பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்!
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் செய்தே இருப்பினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரலட் சுமிக்கு விருந் துணவாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் -- விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
　　தீவண்ணர் திறம் ஒருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
　　உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
　　அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
　　பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே !

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப்போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க் கரசை
　　என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற்கருளிப்
　　பொன்னெடும் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி மிழலை
　　விண்ணிழி செழுங் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும்நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்து பாடி
அறவா!நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

காரணமதாக வந்து புவிமீதே
காலனணு காதிசைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபுரிந்து வருவாயே
ஆரமுதமான தந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர் கிளை மாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுத மொழிகள்

1. குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு

— திருக்குறள்

2. கருக்கெழுத்தும் கைரேகையும் அவற்றைப்
படித்தவர்களுக்கே தெரியும். அதுபோல பக்திமான்களுக்கே
தெய்வம் தெரியும்.

— திருமுருக கிருபானந்தவாரியார்.

3. கடவுள் எங்கும் இருக்கிறார்.
உன்கூடவே இருக்கிறார்.

— இராமகிருஷ்ண பரமஹம்சர்

4. தன்னைக் கொல்லும் பசுவையும் கொல்லலாம்.

— பகவத்கீதை

5. மரணவேதனையால் துடிக்கும் ஒரு பசுக்கன்றைப் பார்த்துக்
கண்ணீர் வடிப்பதைவிட, அதனைக் கொன்றுவிடுவது மேல்.

— மகாத்மாகாந்தி

6. பிறர் நலமும் சேவையும் வாழ்வுக்கு வெற்றி தரும்.

— சுவாமி சிவானந்தர்.

7. கிழிந்த ஆடையைக் களைவது போல இந்த உடலை
எறிந்து விட்டு வெளிக்கிளம்புவது நல்லது.

— சுவாமி விவேகானந்தர்.

8. எழுத்தறிவில்லாத ஏழையரின் இன்னலைச் சிறிதேனும்
தீர்க்காவிட்டால் காவியுடை பூண்டு என்ன பயன்?

— சுவாமி விவேகானந்தர்.

சாந்தி அச்சகம் (கொம்பியூட்டர் பிரின்ட்)
நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2821



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவர்

**அமரர் காசிநாதர் வேலுப்பிள்ளை இராசையா**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு எமக்கு ஆறுதல்
கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்
ஆறுதல் செய்திகள் அனுப்பியோருக்கும்
எமக்கு உதவி ஒத்தாசை வழங்கியவர்களுக்கும்
எமது துக்கத்தில் கலந்து கொண்டவர்களுக்கும்
அந்தியேட்டி. வீட்டுக்கிருத்திய கிரியைகளில்
கலந்து கொண்டவர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்

சுபம்

இங்ஙனம்

"பிருந்தாவனம்"
கதுமலை வடக்கு,
மானிப்பாய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Shanthy Printers (Computer Print) Nachimarkovilady Phone: 2821

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org